Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 28 (13 - 09 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 208

## தரையில் அமர்ந்து கல்விகற்கும் அவல நிலையில் மாணவர்கள்

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் அனைவரும் தரையில் தென்னோலைத் தடுக்கிலிருந்து கல்விகற்கும் அவலநிலைக்கு உள்ளாகியுள்ளனர். ஆசிரியர்கள் அனைவரும் சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்ட தென்னங் குற்றிகளின் மேலிருந்து கற்பித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து செம்பியன்பற்று அ த க. பாடசாலையில் மாலைநேர பாடசாலையாக இயங்கி வந்த பரமேஸ்வரா வித்தியாலயம் கடந்த ஏழாம் திகதி தொடக்கம் செம்பியன்பற்று சந்திக்கு அருகாமையிலுள்ள ஓர் [4 ஆம் பக்கம் பார்க்க]

# யுத்தத்தில் புலிகளின் கை ஓங்கி வருகிறது; வடக்கு கிழக்கை இழக்க வேண்டி வரலாம்

## அரசியல் தீர்வு உடன் அவசியம் சிங்கள பத்திரிகையாளர் தெரிவிப்பு

[லண்டன்]

வடக்கு கிழக்கு போரில் புலிகளின் கை ஓங்குவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துவருவதாகவும், அரசியல் தீர்வொன்றை காணாவிட்டால் வடக்கு கிழக்கை இழக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் சிங்களப் பத்திரிகையாளர் ஐவன் பி பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் உண்மை நிலையை உணர்ந்துள்ள போதும் அரசு வீண் பிடிவாதம் செய்து அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட ஒன்பது இராணுவத் தளபதிகளின் உயிரிழப்பு சாதாரண சிங்கள மக்கள் மத்தியிலும், படையினர் மத்தியிலும் விரக்தி நிலையை ஏற்படுத்தி உள்ளதெனவும், மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் அரசாங்கம் போரை நடாத்திச் செல்ல முடியாத நிலையிலும் அரசியல் தீர்வொன்றை எட்ட முடியாத நிலையிலும் அடுத்த நடவடிக்கை குறித்து சிந்திக்க முடியாத நிலையிலும் இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

சாதாரண மக்கள் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு தடையாக ஒருபோதும் இருக்கவில்லை எனவும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் இன்றைய நிலையில் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதே வடக்கு கிழக்கை இழக்காமலிருக்க ஒரே வழி எனவும் பத்திரிகையாளர் ஐவன் மேலும் தெரிவித்தார்.

## தீர்வைச் சமர்ப்பியுங்கள் தேவையாயின் சந்திக்கலாம்

### - மல்வத்த பீடாதிபதி

(கொழும்பு)

நாட்டின் சமாதானத்திற்காக உங்களின் சமாதானத் தீர்வை சமர்ப்பியுங்கள். நாம் அதைப் பரிசீலனை செய்து மீண்டும் சந்திக்கவேண்டுமென்றால் சந்திக்கலாம் என்று தம்மைச் சந்தித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவிடம் கண்டி சிறிமல்வத்த பீட மகாநாயக்க தேரோ ஸ்ரீரம்புக்வெல்ல ஸ்ரீவிபஸ்தி கூறியுள்ளார்.

வட கிழக்குப்பகுதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஸ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவினர் மகாநாயக்க தேரோவை சந்தித்து உரையாடினர்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நாம் வழங்கப்போகும் ஆலோசனைகளை வழங்குபவர்கள் யார் என்று பார்க்காது என்னவென்று படித்துப் பார்த்து பிரச்சினைக்கு தீர்வுகாண உதவுங்கள் என்று மகாநாயக்க தேரோவிடம் மேற்படி தூதுக்குழு கேட்டுக் கொண்டது.

## அம்பிலாந்துறையில் மோதல் 3 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பில் அம்பிலாந்துறை, கன்னாக்காடு ஆகிய பகுதிகளை கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடன் ரெலோ குழுவினர் இணைந்து சுற்றிவளைத்த வேளை அவர்களுடன் ஏற்பட்ட நேரடிமோதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் மூவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

வீரவேங்கை ஊர்மிலன் (செல்வராஜ் - பேரானந்தம், சிறிகுமார் கோயில் போரைதீவு), வீரவேங்கை (கோகுலதாசன் - கோகுலன் திருகேசு பேரின்பம் செட்டிபாளையம்), வீரவேங்கை பிரஜாபதி-(தயாநிதி -கைலாயபிள்ளை தயாநிதி வாழைச்சேனை), ஆதரவாளரான சற்குணம் (கருத் [4 ஆம் பக்கம் பார்க்க]

## மண் சரிந்து வீழ்ந்ததில் இருவர் மரணம்

ஆனைக்கோட்டையில் நேற்று மண்வெட்டிக் கொண்டிருந்த இருவர் மீது மண் சரிந்து வீழ்ந்ததினால் அவ்விருவரும் ஸ்தலததிலேயே மரணமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் மரணமடைந்த இருவரினது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு எடுத்து வரப்பட்டது.

## வடக்கில் கடற்படையினருக்கு புலிகளால் பெரும் தொந்தரவு

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்படையினருக்கு தொந்தரவு கொடுக்கும் நடவடிக்கைகளை கடற்புலிகள் அதிகரித்துள்ளனர் எனவும் கடற்படையினருக்கு எதிரான அண்மைக்கால நடவடிக்கையில் பல வெற்றிகரமான தாக்குதல்களை விடுதலைப்புலி எனவும் சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெனாண்டோ தெரிவித்தார்.

மண்டைதீவில் இருந்து கடற்படைக்குச் சொந்தமான படகொன்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றிச் சென்றது குறித்து ஆரம்பவிசாரணை படைத்தளபதி விடுதலைப் புலிகள் படகுடன் 900 சுற்றுத் ரவைகளையும், உயிர் காப்பு உடைகள் மற்றும் சில பொருள்களையும் கொண்டு சென்றதாகவும் தெரிவித்தார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டை எதிர்த்து கிளிநொச்சியில் நாளைமறியல்

### பொதுமக்களுக்கு அறைகூவல்

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் திட்டத்தைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற உள்ளது.

இம் மாபெரும் மறியல் போராட்டத்தை கிளிநொச்சி மாவட்ட வெகுஜனஅமைப்புக்களின் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது

புக்வெல்ல ஸ்ரீவிபஸ்தி கூறியுள்ளார்.

வட கிழக்குப்பகுதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ... என்று பார்க்காது என்னவென்று படித்துப்பார்த்து பிரச்சினைக்கு தீர்வுகாண உதவுங்கள் என்று மகாநாயக்க தேரோவிடம் மேற்படி தூதுக்குழு கேட்டுக் கொண்டது.

... நிலையை உணர்ந்துள்ள போதும் அரசு வீண் பிடிவாதம் செய்து அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளாமல் ... வித்தார்.

அண்மையில் ஏற்பட்ட ஒன்பது இராணுவத் தளபதிகளின் உயிரிழப்பு சாதாரண சிங்கள மக்கள் மத்தியிலும், படையினர் மத்தியிலும் விரக்தி நிலையை ஏற்படுத்தி உள்ளதெனவும், மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் அரசாங்கம் போரை நடாத்திச் செல்ல முடியாத நிலையிலும் அரசியல் தீர்வொன்றை எட்ட முடியாத நிலையிலும் அடுத்த நடவடிக்கை குறித்து சிந்திக்க முடியாத நிலையிலும் இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

சாதாரண மக்கள் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு தடையாக ஒருபோதும் இருக்க ... எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இன்றைய நிலையில் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதே வடக்கு கிழக்கை இழக்காமலிருக்க ஒரேவழி எனவும் பத்திரிகையாளர் ஐவன் மேலும் தெரிவித்தார்.

## இருவர் மரணம்

ஆனைக்கோட்டையில் நேற்று மண்வெட்டிக் கொண்டிருந்த இருவர் மீது மண் சரிந்து வீழ்ந்ததினால் அவ்விருவரும் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் மரணமடைந்த இருவரினது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு எடுத்து வரப்பட்டது.

# வடக்கில் கடற்படையினருக்கு புலிகளால் பெரும் தொந்தரவு

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்படையினருக்கு தொந்தரவு கொடுக்கும் நடவடிக்கைகளை கடற்புலிகள் அதிகரித்துள்ளனர் எனவும் கடற்படையினருக்கு எதிரான அண்மைக்கால நடவடிக்கையில் பல வெற்றிகரமான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளனர் எனவும் சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெணாண்டோ தெரிவித்தார்.

மண்டைதீவில் இருந்து கடற்படைக்குச் சொந்தமான படகொன்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றிச் சென்றது குறித்து ஆரம்பவிசாரணைகளை மேற்கொண்ட கடற்படைத்தளபதி விடுதலைப் புலிகள் படகுடன் 900 சுற்று ரவைகளையும், உயிர்காப்பு உடைகள் மற்றும் சில பொருள்களையும் கொண்டு சென்றதாகவும் தெரிவித்தார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரண வெட்டை எதிர்த்து கிளிநொச்சியில் நாளைமறியல்

## பொதுமக்களுக்கு அறைகூவல்

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் திட்டத்தைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற உள்ளது.

இம் மாபெரும் மறியல் போராட்டத்தை கிளிநொச்சி மாவட்ட வெகுஜனஅமைப்புக்களின் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் அகதிகளாகிய மக்கள் கணிசமாக வாழும் மாவட்டங்களில் கிளிநொச்சியும் ஒன்று. இவர்களுக்கு மேற்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எல்லைப்புற கிராமங்களில் தீவிரபாதுகாப்பு ஏற்பாடு

எல்லைப் புற கிராமங்களில் இராணுவ பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது வவுனியா எல்லைப்புற கிராமப் பகுதிகளில் புலிகளின் திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்துவருவதனால் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை எல்லைப்புறக் கிராமங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து பெருமளவு சிங்கள குடியேற்றவாசிகள் வவுனியாவை விட்டு வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ உயர்மட்டத்தில் மாற்றம் மாதஇறுதிக்குள் புதியநியமனங்கள்

## வடபிராந்தியத்திற்கு புதிய தளபதி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ உயர் மட்டத்தில் இம்மாத இறுதிக்குள் பல மாற்றங்களும். பதவி உயர்வுகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மைக் காலத்தில் புலிகளின் தாகுதலினால் பல இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டதும், சிலர் பதவி விலகியதன் காரணமாகவும் இம் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

சுமார் எண்பதாயிரம் பேரைக் கொண்ட சிறிலங்கா இராணுவத்தில் இந்த மாத இறுதிக்கு முன் முக்கியமான பொறுப்புக்களில் பெரும் மாற்றங்கள் நிகழலாம் என்று இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன. தற்போது இராணுவத் தளபதிகள் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கும் பாலரட்ணராஜா எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஓய்வுபெற இருப்பது தெரிந்ததே

ஓய்வுபெற இருக்கும் பாலரட்ணராஜாவின் இடத்திற்கு மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவும், ஜெரி சில்வாவின் இடத்திற்கு பிரிகேடியர் ஆர் எஸ். தளுவத்த பதவி உயர்த்தப்படுவார் பிரிகேடியர் தளுவத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒக்டோபர் 24 இல் மீள் பரீட்சை

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தோற்றியவர்களுக்கான பௌதிகவியல் பகுதி-2 இற்கான மீள்பரீட்சை ஒக்டோபர் 24 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வட-கிழக்கில் போர் தொடரும் அணுகுமுறையில் மாற்றமில்லை

## பாராளுமன்றத்தில் சிறிலங்கா பிரதமர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும் என்றும், விடுதலைப்புலிகள் தொடர்பான கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் பிரதமர் டி.பி. விஜயதுங்கா பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைத் திட்டம் பற்றி பாதுகாப்பு காரணங்களுக்காக தெரியப்படுத்த முடியாதெனவும் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசும்போது மண்டைதீவில் கடற்படையினரது நவீனரக பீரங்கிப்படகின் நங்கூரம் கழன்றதால் அப்படகு கடலில் மிதந்து சென்று காணமல் போய்விட்டதாகவும் இதைத்தேடி கண்டு பிடிக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தை வைத்தியரின் அபாய அறிவிப்பு

# போசாக்கின்மை காரணமாக சிசு மரண விகிதம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிசு மரண விகிதம் அதிகரித்து வருகிறது.

### ஏழுமாதத்தில் 283 சிசு மரணம்

இம்மாவட்டத்தில் நிலவும் யுத்த நிலைமையும், போதியபோசாக் கின்மையும், சிறந்த வைத்திய வசதி இன்மையுமே மேற்படி சிசு மரண விகிதம் அதிகரித்துச் செல்வதற்குக் காரணம் என்று யாழ் போதனா மருத்துவமனை குழந்தை வைத்திய நிபுணர் பேராசிரியர் சிவசூரியர் தெரிவித்தார்.

மேற்படி வைத்தியசாலையின் பதிவேட்டின்படி கடந்த ஏழு மாத காலத்தில் சுமார் 283 சிசுக்கள் மரணமடைந்துள்ளன இவற்றுள் 148 சிசுக்கள் பிறந்து இறந்துள்ளன. மிகுதியானவை தாயின்வயிற்றிலேயே இறந்துள்ளன.

யாழ் குடாநாட்டில் தற்பொழுது நிலவும் உணவுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வாணிபம், தொழில் முயற்சிகள்

# பதிவு செய்வது தொடர்பாக நிதிப்பிரிவு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வாணிபம்/தொழில் முயற்சிகள், அவற்றைப் பதிவுசெய்தல் தொடர்பாக சில விளக்கங்களையும் நியந்தனைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு செ தமிழேந்தி அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கை வருமாறு:-

வாணிபம் என்பது நிரந்தரமான நிறுவனங்களை மட்டுமல்லாது வாணிபம் தொடர்பான தரகர்கள், முகவர்கள், நடமாடும் வாணிபர்கள் ஆகியோரின் தொழிற்பாட்டையும் உள்ளடக்கும்.

வாணிபம்/தொழில் முயற்சிகளைப் பதிவுசெய்யும் செயல்முறைபோக்குவரத்துச்சேவை, பிரயாணச்சேவை ஆகியவற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் படுகொலைகளுக்கு சிறிலங்கா படையே காரணம்

## விசாரணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பொலிசாராலும் இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட பல மனித உரிமை மீறல் சம்பவங்களை சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல் தொடர்பான விசாரணைக் குழு ஊர்ஜிதம் செய்துள்ளது.

முன்னாள் நீதிபதி ஜே எவ். ஏ சொய்சா தலைமையிலான இக்குழு இது தொடர்பாக அறிகையொன்றில் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலந்தனையில் 39 அப்பாவித் தமிழ் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக 20 சிறிலங்கா இராணுவத்தினர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர். இவர்களின் படுகொலைக்கு இராணுவத்தினரே காரணம் என இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது

இச்சம்பவத்தில் சிறுவர், பெண்கள், வயோதிபர் உட்பட பலர் குடும்பம் குடும்பமாக வெட்டிக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

திருக்கோணமலை மாவட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்குடாவிற்கு கப்பல்மூலம்

# பழுதடைந்த தானியங்கள் வருவதை தடுக்க முயற்சி

உளுத்துப்போன தானியங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேருவதைத் தடுப்பதற்கு யாழ் செயலகம் முயற்சி எடுத்து வருகிறது.

அண்மையில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 4]

தற்போது ஆண்டு 4-ல்கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை (ஆண்டு4 பாடத் திட்டத்திற்குள்) 13. 09. 1992 ஞாயிறு மு. ப 8.00, மு.ப 11.00 மணி நேரங்களில் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3150)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி/4964)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை கஜேந்திரன் ஆகியஎனதுதேசிய அடையாள அட்டை ( இல 712580437v ) 7-9-92 திங்கட்கிழமை அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'சறோஜினி வாசா' கைதடி தெற்கு கைதடி எனும் முகவரிக்குஅனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3168)

### நாட்டுக் கூத்து
(நல்லூர்)

குருநகர் சென்றோக்ஸ் சன சமூக நிலையத்தினால் இன்று பி. ப. 7 மணிக்குச் சென்றோக்ஸ் சனசமூகநிலைய யோகம் கலை அரங்கில் 'விசய மனோகரன்' என்னும் நாட்டுக் கூத்து ஒன்று மேடையேற்றப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் யாழ்.புனித மரியன்னை பேராலய பங்குத் தந்தை வண. பிதா ஜெபநேசன் அடிகளாரும், கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் மறவனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்த உள்ளார்கள். இந்நாட்டுக் கூத்தை

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 13 |  | 13 |
| — | | — |
| 09 | | 09 |
| — | | — |
| 1962 | | 1988 |


### 2-ம் லெப்டினன்ட் ராதா
(சிவகுரு தங்கவேலு)

நான்கு ஆண்டு போனதடா!
நானிலத்தைப் பிரிந்து
ஆனாலும் எம் நினைவில்
நிலைத்துள்ளாய் - ஆதலினால்
உன் வழியில் தொடர்கின்றோம்
இலட்சியத்தை அடைவதற்கே!

13-09-1992 இன்று இவரது 4 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு அவரை என்றும் நெஞ்சத்தில் நின்றும் பிரீயாத உறவினர்களான

ராஜகிராமம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
அண்ணா, அண்ணிமார், பிள்ளைகள்.
(3163)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மாவீரன் குணேஸ்
(ஜெயக்கிளி ஜெகநாதன்)

வீரப்பிறப்பு : 04 - 03 - 1972
வீரச்சாவு : 13 - 09 - 1990

தாயணைப்பிலே உறங்க வேண்டிய

கல்விப்பணிப்பாளர் அசிரத்தையே

## தொண்டர் ஆசிரியர் நியமனம்தாமதிக்க காரணம்

யாழ். கல்விப்பணிப்பாளரின் பொறுப்பற்ற தன்மையினால் வடபகுதியில் பணிபுரிந்த 500 தொண்டர் ஆசிரியர்கள் வரை நிரந்தர நியமனம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு இந்நிலை ஏற்படுமெனின் இதற்கான முழுப்பொறுப்பையும் யாழ். கல்விப்பணிப்பாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும் இதற்காக கல்விச்சேவை அதிகாரிகளையோ கல்வி அமைச்சு அதிகாரிகளையோ பிழை கூற முடியாது.

இவ்வாறு தமிழர் ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் திரு.மகாசிவம் அவர்களால் விடுக்கப்பட்ட அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஆயிரத்துக்கும் அதிகமான தொண்டர் ஆசிரிய வெற்றிடங்கள் யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தன கல்விப் பணிப்பாளர் இவ்1000 தொண்டர் ஆசிரியர்களினையும் சிபார்சு செய்திருந்தால் அனைவரும் சமகாலத்தில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பர் கல்விச்சேவைச்சபை சகலபணிப்பாளர்களையும் தொண்டர் ஆசிரியர்களை ஏ பி சி டி.என நான்காக வகுத்து அனுப்பும்படி கேட்டிருந்தது

இந்நிலையில் யாழ். பணிப்பாளர் ஏ பி எனும் பிரிவுகளில் அடங்கிய 469 தொண்டர் ஆசிரியர்கள் பெயர்ப்பட்டியலையே அனுப்பி இருந்தார். அந்தப்பட்டியலும் முழுமையானதல்ல சி.டி பட்டியல் கல்விச் சேவைச்சபைக்கு அனுப்பி வைக்கப்படவே இல்லை

எனவே இதனால் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமது மேன்முறையீட்டை கோட்டக்கல்வி அதிகாரிகளிடம் சமர்ப்பித்து விட்டு அதன் பிரதியை தொ. ஆ.சங்கத்தினூடாக இ. த. ஆ. சங்கத்திடம் சமர்ப்பித்தால் அவை தொடர்பாக குறிப்பிட்டஅதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நீதி வழங்கப்படும் என அவ் அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திலீபன் ஞாபகார்த்த இலக்கியப் போட்டி

லெப்.கேணல் திலீபன் ஞாபகார்த்தமாக வன்னி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே இலக்கிய அறிவுப் போட்டியொன்றினை நடத்துவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளின் வன்னிமாவட்ட அரசியல் நிர்வாகப்பிரிவு மேற்கொண்டுள்ளது பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் இப்போட்டிகளிலிருந்து கோட்ட மட்டத்தில் அதிகூடியபுள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படவுள்ளது

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

**மீண்டும் எங்கள் சேவை**

★ மிளகாய் ★ குரக்கன் ★ அரிசி
ஆகியவை அரைத்தும்,
நெல் குற்றியும் தீட்டியும் கொடுக்கப்படும்
குறைந்த செலவில்
நிறைந்த சேவைக்கு

**சரஸ்வதி மில்**
ஸ்ரேசன் றோட், கொக்குவில்
(ஆடியபாதம் வீதி)
(சி-5043)

## நெஞ்சை விட்டகலா 2-ம் ஆண்டு நினைவலைகள்



## டெல்டா தோட்டதொழிலாளர் 25நாளாகவேலை நிறுத்தம்

புசல்லாவை டெல்டா தோட்டத்தைச்சேர்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் கடந்த 25 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி தோட்டத்தில்பணிபுரியும் இரண்டு உத்தியோகஸ்தர்களை பதவியில் இருந்துநீக்குமாறு கோரி வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளதாக தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் டி. அய்யாத்துரை தெரிவித்துள்ளார்.

இவ்வேலைநிறுத்தம் தொடர்பாக தொழிற்திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதும் சுமுகமான தீர்வுகள் எதனையும் எட்டாததினால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இவ் வேலைநிறுத்தம் தொடர்பாக கொழும்பு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நினைவு கூருகின்றோம்..

### 1992 - 09 - 13

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு ஆரையம்பதி பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**றியாஸ்/அருணா** [தியாகராசா சதீஸ்வரன் ஆரையம்பதி-03, மட்டக்களப்பு]

மணலாறு - நெடுங்கேணி, சன்னாசிப்பரந்தன் பகுதியில் இந்தியபபடையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப்.ராதா** (சிவகுரு தங்கவேல் - சன்னாசிப் பரந்தன் - நெடுங்கேணி, மணலாறு)

வல்வெட்டித்துறையில் இந்திபப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப்.குகன்** (இளம்சிங்கம் இளம்செழியன் அத்துளு, கரவெட்டி கிழக்கு)

1989 -ம் ஆண்டு திருகோணமலை-மூதூர் கட்டைபறிச்சான் இறாலபாலம் பகுதியில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப.ரூபன்** (இ திருச்செல்வம்-திருக்கோணமலை)

**2-ம் லெப்.சுருளி** (முத்துக்குமார் பாலசிங்கம்-பள்ளிக்குடியிருப்பு, மூதூர். திருக்கோணமலை)

இதேபகுதியில் விபுலானந்த மகாவித்தியாலயக்கட்டிடத்தினுள் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லடபட்ட-

★ **காளி** (பிள்ளையான் காளிராசா - கட்டைபறிச்சான், மூதூர், திருக்கோணமலை)

மற்றும் இதேசம்பவத்தில சுட்டு கொல்லப்பட்ட மாணவ-மாணவியராகிய சிறுவர்கள் மற்றும் இளம் பெண்கள் உட்பட 17 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாககுதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் அஞ்சனா** (கோணேஸ்வரி பொன்னம்பலம்-898, அன்சார் வீதி வட்டக்கச்சி. கிளிநொச்சி)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கபடன் ஆனந்தபாபு** (ஆறுமுகம் ஜெ தீஸ்வரன்-பூவரசங்குளம, வவுனியா)

**லெப். நெப்போலியன்** (சங்கரசிவம் விக்னேஸ்வரன் - நெட்போலியன் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்.)

**சந்திரபாபு** (யோகசிகாமணி ராகவன் - 49. சட்ட

சன்மானம் வழங்கப்படும். (3168)

## நாட்டுக் கூத்து

(நல்லூர்)

குருநகர் சென்றோக்ஸ் சன சமூக நிலையத்தினால் இன்று பி.ப. 7 மணிக்குச் சென்றோக்ஸ் சனசமூகநிலைய யோகம் கலை அரங்கில் 'விசய மனோகரன்' என்னும் நாட்டுக் கூத்து ஒன்று மேடையேற்றப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் யாழ்.புனித மரியன்னை பேராலய பங்குத் தந்தை வண. பிதா ஜெபநேசன் அடிகளாரும், கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் மறவனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்த உள்ளார்கள். இந்நாட்டுக் கூத்தை அண்ணாவியார் ஆ.மரியதாஸ் அவர்கள் நெறிப்படுத்தி உள்ளார்.

## புதிய நியமனங்கள்

(நல்லூர்)

இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் 1992-95-ம் ஆண்டுகளுக்கான புதிய பணிப் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் தலைவராக மகா வந். நிக்கலஸ் மார்க்களஸ் பெர்ணான்டோ அவர்களும், உபதலைவராக அதி வந். தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், பொதுச் செயலாளராக அதி. வந். ஒஸ்வல்ட் கோமஸ் அவர்களும் உபபொதுச் செயலாளராக அருட் திரு என் டயஸ் கருணாரத்ன அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.


## தொலைபேசி அகராதி

(நல்லூர்)

உலகெங்கிலும் இருந்து ஐரோப்பாவின் பல பாகங்களிலும் செறிந்து வாழும் தமிழர்களின் தொலைபேசி இலக்கங்களை கொண்ட அகராதி ஒன்றை வெளியிட ஜெர்மனியில் தற்போது இயங்கி வரும் ''இரங்கும் இல்லம்'' அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ் அகராதி ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் வெளியிடப்பட உள்ளதாகவும் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் வசிக்கும் தமிழர்கள் விபரங்களை காலம் தாழ்த்தாமல் அனுப்பிவைக்குமாறும் இவ் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் அகராதியை வெளியிடுவதன் மூலம் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களில் உண்மை நிலையைக்கண்டு அவர்களுக்கு உதவமுடியும் எனவும் இவ் அமைப்புக் கூறியுள்ளது.



## மாவீரன் குணேஸ்

(ஜெயக்கிளி ஜெகநாதன்)


வீரப்பிறப்பு : 04-03-1972 வீரச்சாவு : 13-09-1990

தாயணைப்பிலே உறங்க வேண்டிய
தளிர்கள் எத்தனை விடுதலை வேள்வித்
தூயதீயதனில் தணல்கள் ஆயின.
குணேசின் களபுரி தியாகம் நிட்சயம்
தாயகத் தமிழீழம் மீட்டிடும்
சரித்திரம் ஒன்று படைக்கும்.

காங்கேசன்துறை (3149) -குடும்பத்தினர்

## 4-வது வருட நினைவஞ்சலி

இவன் விழிகாட்டும் இலட்சியம்
இம் மண்ணின் விடியலின் சாட்சியாம்



இவன் தாய் பெற்றது
15.11.1959

வரலாற்றுத் தாய்
தத்தெடுத்தது
13.09.1988

### லெப். குகன்

(இளஞ்சிங்கம் இளஞ்செழியன்)

உன்னை உன்சக தோழரை
இல்லாது செய்ய!
தன்னை தன் சுய ரூபத்தை,
நன்றாக மறைத்து!
வந்தது, இந்திய இராணுவம்...
அஞ்சாது நின்று;
அந்நியமான அப்படை யாடங்காண,
செய்தவன் நீ !
காலத்தாய் காட்டிய கடமையை,
செவ்வனே செய்து;
எதிரியின் எண்ணமது பொடியாக்கி
வீரச்சா கண்டாய்!
வீரமகனே விரையுது பார்: நீகொண்ட
இலட்சிய ஈடேற்றம்.

'குறளகம்'
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (சி-5032) - குடும்பத்தினர்

ஆகியவை அரைத்தும்,
நெல் குற்றியும் தீட்டியும் கொடுக்கப்படும்
குறைந்த செலவில்
நிறைந்த சேவைக்கு
சரஸ்வதி மில்
ஸ்ரேசன் றோட், கொக்குவில்
(ஆடியபாதம் வீதி)
(சி-5043)

## நெஞ்சை விட்டகலா 2-ம் ஆண்டு நினைவலைகள்



### கப்டன் அஞ்சனா

(பொன்னம்பலம் கோணேஸ்வரி)

தாயின் மடியில் 17·09·1967 தமிழீழ மண்ணில் 13·09.1990

வட்டக்கச்சி மண்ணில் வந்துதித்து
எம் பதியில் நீர் வளர்ந்து
தமிழீழ மண்ணுக்காய்
ஆறாண்டு உழைத்து
மாண்டு போய் ஈராண்டு ஆனாலும்
மாறுமோ உம் நினைவு
மன்னார் மாங்குளம்
தன்னுடனே கொக்காவிலும்
நீர் புரிந்த சாதனை அரிதாமோ
கோட்டைக் கொத்தளத்தில்
கொடியவனின் கணையால்
மாவீரர் ஆனாலும் - நீர் வளர்த்த
வீரர்கள் நின் பணியில் நிற்கின்றனர்.

இவருடன் மரணித்த பதின்மூன்று வேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

798 அன்சார் வீதி,
வட்டக்கச்சி, - குடும்பத்தினர். (3124)

ளிக்குடியிருப்பு, மூதூர், திருக்கோணமலை)

இதேபகுதியில் விபுலானந்த மகாவித்தியாலயக்கட்டடத்தினுள் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லடபட்ட-

★ **காளி** (பிள்ளையான் காளிராசா - கட்டைபறிச்சான், மூதூர், திருக்கோணமலை)

மற்றும் இதேசம்பவத்தில சுட்டு கொல்லப்பட்ட மாணவ-மாணவியராகிய சிறுவர்கள் மற்றும் இளம் பெணகள் உட்பட 17 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாககுதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் அஞ்சனா** (கோணேஸ்வரி பொன்னம்பலம்- 898, அன்சார் வீதி வட்டக்கச்சி, கிளிநொச்சி)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கபடன் ஆனந்தபாபு** (ஆறுமுகம் ஜெகதீஸ்வரன்- பூவரசங்குளம, வவுனியா)

**லெப். நெப்போலியன்** (சங்கரசிவம் விக்னேஸ்வரன் - நெடபோலியன் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்.)

**சந்திரபாபு** (போசசிகாமணி ராகவன் - 49, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்)

**தமிழ்ச்செல்வன்** (நடராசா நந்தருபன் - வணணாங்கேணி, பளை)

**றொபின்** (பேரின்பராசா கணேஸ் - பன்னங்கண்டி, 3-ம வாய்க்கால், பரந்தன், கிளிநொச்சி)

**விஜயன்** (கந்தப்பு தெய்வேந்திரம் - கரவெட்டி தெற்கு யாழ் )

**சுரேன்** (சின்னத்துரை சுதாகர் - தம்பலகமம், திருக்கோணமலை)

**குணேஷ்** (ஜெயரட்ணராஜா (ஜெயக்கிளி) ஜெகநாதன் - காங்கேசன்துறை - யாழ் )

**றெஜினோல்ட்** (விநாசித்தம்பி விஜோகரன் - மாமூலை, முள்ளியவளை, முல்லைத்தீவு)

**நிக்கலஸ்** (சுப்பையா ரவி - கப்புது, கரவெட்டி யாழ்.)

**நிவாஸ்** (சின்னத்தம்பி ராமச்சந்திரன்- வீராடுசேனை மட்டக்களப்பு)

**குருபரன்** (சங்கரலிங்கம் யோகசேகரன் கொக்குவில் மேற்கு யாழ் )

மட்டக்களப்பு - சின்னவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய - **சைமன்** (கோயில்போரதீவு, மட்டக்களப்பு)

திருக்கோணமலை திரியாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். றொபின்** (மாரிமுத்து ரகுநாதன் - 3-ம் வட்டாரம், அடுக்குப்பார், சாம்பல்தீவு, திருக்கோணமலை)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - சுட்டுக் கொல்லப்பட்ட ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - வாழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்,

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5041)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

பிறரை ஏமாற்ற துணிந்து முயல்கிறோம்
நமக்கே சிலந்தி வலையைப்பின்னி விடுகிறோம்.
— ஸர் வால்ட்டர்ஸ்காட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## முட்டாள்கள் ஆக்கும் முயற்சி

"மண்டைதீவு கரையோரமாக நங்கூரமிடப்பட்டிருந்த கடற்படைக்குச் சொந்தமான படகு அதன் நங்கூரம் கழன்றதால் கடலில் மிதந்து எங்கோ காணாமல் போய்விட்டது. அதைத்தேடிக் கண்டுபிடிக்கும் பணியில், கடற்படையினர் ஈடுபட்டிருக்கின்றார்கள்" இவ்வாறு பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான டி பி. விஜயதுங்கா கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் கேள்வி ஒன்றிற்கு திரு. டி. பி. விஜயதுங்கா பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். பிரதமரின் இப்பதில் சிங்கள மக்களை குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் முழு முட்டாள்கள் என்ற எண்ணத்தில் அளிக்கப்பட்ட பதிலாகும்.

ஏனெனில், மண்டைதீவில் இருந்து கடற்படை படகை விடுதலைப்புலிகள் கவர்ந்து சென்றமை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களால் இதற்கு முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்தப் படகை விடுதலைப்புலிகள் எவ்வாறு கவர்ந்து சென்றார்கள் என்பதைக் கண்டறிந்து உடனடி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கடற்படைத் தலைமைப்பீடத்திற்கு உத்தரவும் இட்டுள்ளது. இவ் உத்தரவை அடுத்து கடற்படைத் தலைமை நிலைமையை நேரில் அவதானித்ததோடு விசாரணையையும் முடுக்கி விட்டுள்ளது.

இதேவேளை, புலிகளால் கைப்பற்றிய படகிற்குப் பொறுப்பான பல கடற்படையினர் இராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்ணான்டோ நியமித்துள்ள விசாரணைக்குழு இவ்விசாரணையை மேற்கொள்ளவும் உள்ளது,

இச்சம்பவம் தொடர்பாக மேலே குறிப்பிட்ட விடயங்கள் யாவும் கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில், குறிப்பாக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளிலும் வெளிவந்தசெய்திகள் ஆகும். இந்த நிலையில், பிரதமர் டி பி விஜயதுங்கா படகு நங்கூரம் கழன்றதால் அடித்துச் செல்லப்பட்டது கடற்படையினர் படகைத் தேடுகின்றனர் எனக் கூறுவதெல்லாம், முன்னுக்குப்

## சென்னையில் கலகம் செய்வோரை கண்டவுடன் சுடும்படி உத்தரவு

[சென்னை]

சென்னை நகரத்தில் தீயிடல் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டவுடன் சுட்டுவிடும்படியானஉத்தரவொன்றைமாநில அரசு பிறப்பித்துள்ளது

நேற்றிரவு சென்னை நகர பொலிஸ் கமிஷனர் ராஜகோபாலன் இந்த உத்தரவை அறிவித்தார். விஷமிகளைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கல்வீச்சினால்இரண்டு பேருந்துகள் சேதமடைந்தன. மத்திய சென்னையில் மரக்கடை ஒன்றும் தீயிடப்பட்டது. கடந்தவியாழனன்று நடைபெற்ற சமய ஊர்வலம் ஒன்றைத் தொடர்ந்து இடம்பெறும் கலகங்களினால் இதுவரை சுமார் முந்நூறு பேர் வரை கைது செய்யப்பட்டிருப்பதாகபொலிசார் கூறியுள்ளனர்.

## ஜார்க்கண்ட் தனிமாநிலத்திற்கு பீகார் முதலமைச்சர் எதிர்ப்பு

(டில்லி)

பீகார் மாநிலத்தில் தனியான ஜார்க்கண்ட் மாநிலம் அமைக்கும் யோசனைக்கு பீகார் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்,

நேற்று முன்தினம் மாலையில் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்தைப் பிரிக்கும் எந்த முயற்சியையும் எதிர்த்து உறுதியுடன் போரிடப்போவதாக குறிப்பிட்டார். அத்துடன் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்பாக ஜார்க்கண்ட் பிரச்சினைபற்றி விவாதிக்க எல்லா தேசிய அரசியல் கட்சிகளினதும், கூட்டமொன்றை அழைக்குமாறு பிரதமரிடம் வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார். எனினும் பழங்குடிமக்கள் வாழும் பகுதியில் சுய நிர்வாகப் பிரிவை ஏற்படுத்தவும், ஜார்க்கண்ட் பகுதிக்கான சபை ஒன்றை ஏற்படுத்துவது பற்றியும் சட்டப் பேரவை இயற்றிய தீர்மானம் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் விளக்கினார்.

## யெல்சினின் ஜப்பான்விஜயம் இறுதி நேரத்தில் ரத்து

(மொஸ்கோ)

ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் ஜப்பானுக்கான தனது பயணத் திட்டத்தை இறுதி நேரத்தில் ரத்துச் செய்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ரஷ்யா தன்வசமாக்கிக்கொண்ட ஜப்பானியத்தீவுகள் தொடர்பாக ஜப்பானுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நிலவிவரும் சர்ச்சைக்கு தீர்வு காணப்படாமையே யெல்சின் தமது விஜயத்தை ரத்துச் செய்தமைக்கான காரணமாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

இதேவேளை தென் கொரியத் தலைநகர் சியோனுக்கு அடுத்தவாரம் மேற்கொள்ளத் திட்டமிட்ட விஜயத்தையும் ரத்துச் செய்துள்ள அதிபர் யெல்சின் இதுபற்றி தென் கொரிய அதிபருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மாறிவரும் சர்வதேச அரசியல் நிலைமைகளாலும், உள்ளூரில் அதிகரித்துவரும் வேலைகளாலும் தமது விஜயம் கைவிடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானியத்தீவுகள்தொடர்பான சர்ச்சை தீர்க்கப்பட்டாலேயே ரஷ்யாவுக்கு பெருமளவிலான உதவிகளைச் செய்ய முடியும் என்று ஜப்பான் கூறி வருகின்றமை தெரிந்ததே

ஆனால் உள்ளூரில் கன்சர்வேட்டிவ்களின் எதிர்ப்பை சந்தித்துவரும் அதிபர் யெல்சின், ஜப்பானியத்தீவுகள் கையளிக்கப்படமாட்டாது என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

அதிபர் யெல்சினின் விஜயம் இறுதி நேரத்தில் ரத்துசெய்யப்பட்டமைக்கு வருத்தம் தெரிவித்துள்ள ஜப்பான், தனது தீவுகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை என்றும் கூறியுள்ளது.

## இளவரசி ஆன் இந்தியா விஜயம்

(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசி ஆன் இந்தியாவிற்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். எலிசபெத் மகாராணியின் புதல்வியான இளவரசி ஆன் தனிப்பட்ட முறையிலான

## காஷ்மீரில் கடும் மழை 112பேர் உயிரிழப்பு

(டில்லி)

ஜம்முகாஷ்மீரில் பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை நூற்றிப்பன்னிரண்டாகஉயர்ந்துள்ளது செனாட் நதியிலும், ஷாவி நதியிலும் அபாய அளவுக்கு சமீபமாக வெள்ளம் பாய்கின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் மாநிலஅரசு ஈடுபட்டுள்ளது.

சிறீநகர் - ஜம்மு பகுதிகளில் சிறீநகர், ஹாட்கில், வதோட்டி நெடுஞ்சாலைகளில் மண்சரிவினால் பாதைப் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## சவுதிக்குஎப்.15விமானங்கள் அமெரிக்கா விற்கும்

இஸ்ரேலின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சவுதி அரேபியாவுக்கு

ஒப்புதல் அளித்துள்ளார்.

எனினும் அதிபர் புஷ்ஷின்

## புலிகளுக்கு ஆதரவாக ஜெயலலிதா செயற்பட்டார்

-ஆலடி அருணா

(சென்னை)

பத்மநாபாவின் கொலைக்குப் பின்னரும் புலிகளுக்கு ஆதரவாக இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா பேசினார். என்று தி. மு. கழகத்தின் செய்தித் தொடர்புச் செயலர் ஆலடி அருணா கூறியிருக்கிறார்.

பத்துமநாபாவின் கொலைக்குப் பிறகும் புகார் கூறும் விதத்தில் விடுதலைப் புலிகள் நடக்க வில்லை என்று ஜெயலலிதாவே செய்தித் தாள்களுக்குப் பேட்டி அளித்தார்.

சுப்பிரமணியம் சுவாமி இப்போது குறிப்பிடுவது போல ஜெயலலிதா புலிகளோடு இரகசியத் தொடர்புவைத்திருக்க மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது என்று ஆலடி அருணா கேள்வி எழுப்பினார்.

## ஜெயலலிதாவின் கட்சிக்குள் அதிருப்தி வலுக்கின்றது

– திண்டிவனம் ராமமூர்த்தி

(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சி நடவடிக்கைகள் குறித்து மாவட்ட மட்டத்திலான அவரது கட்சித்தலைவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் அதிருப்தி அடைந்திருப்பதாக மூப்பனாரின் ஆதரவாளரும், மக்களவை உறுப்பினருமான திண்டிவனம் ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

மாநிலத்திலுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினர் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடனான உறவை எதிர்க்கவில்லை என்றும், மாறாக ஜெயலலிதா அரசின் நிர்வாக ஊழல்களையும், நிர்வாகச் சீர்கேடுகளையுமே எதிர்ப்பதாகத் திண்டிவனம் ராமமூர்த்தி மேலும் தெரிவித்துள்ளார்.

குவைத்தில் பணிபுரியும்

## வெளி நாட்டவர்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிப்பு

குவைத்தில் பணிபுரியும் பல்லாயிரக் கணக்கான ஆசிய நாட்டவர்களை பாதிக்கும் புதிய சட்டம் ஒன்றைக் குவைத் அரசு இயற்ற இருக்கிறது.

குவைத்தில் அரசுத்துறையில் பணிபுரியும் வெளிநாட்டவர் குறைந்தது 1500 டாலர் மாதாந்தச் சம்பளம் பெறுபவர்களாக இருந்தால்தான் அவர்கள் தமது குடும்பங்களை அழைத்துவர அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தகுதி பெற தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் குறைந்தது 2200 டாலர் மாதச் சம்பளம் பெற வேண்டும்.

இந்தப் புதியசட்டம்காரணமாக அதிக சம்பளம் பெறும் உயர் அதிகாரிகளைத் தவிர மற்றவர்கள் குடும்பத்துடன் குவைத்தில் வாழ அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால், ஏலவே அங்கு குடும்பத்துடன் வாழும் தொழிலாளர் பற்றி குவைத் அரசு இன்னும் விளக்கம் தரவில்லை.

மற்ற வளைகுடா நாடுகளிலும் இதேபோன்ற சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

## ஊழல் விசாரணையில் ராவ் அமைச்சர்கள் தலையீடு

இந்தியாவின் 120 கோடி டாலர் வங்கி ஊழல் தொடர்பான பாராளுமன்றக் கமிட்டியின் விசாரணையில் செல்வாக்கை பிரயோகிக்க முயன்றதாக இரு அமைச்சர்கள் மீதான குற்றச் சாட்டு குறித்து பிரதமர் நரசிம்மராவ் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

தனது சிரேஷ்ட அமைச்சர்களுடனும், ஆளும் கட்சியில் உள்ள தனது சகாக்களுடனும் நரசிம்மராவ் இது குறித்து

சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களும் பதவி நீக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள்.

ஊழல் பற்றி விசாரித்து வரும் 30 அங்கத்தினர்கள் அடங்கிய கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டியானது, இரு உதவி நிதியமைச்சர்கள் கமிட்டியின் வேலைகளில் தங்கள் செல்வாக்கை பிரயோகிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டியுள்ளது

அணிசேரா மாநாட்டில்

படகை விடுதலைப்புலிகள் எவ்வாறு கவர்ந்து சென்றார்கள் என்பதைக் கண்டறிந்து உடனடி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கடற்படைத் தலைமைப்பீடத்திற்கு உத்தரவும் இட்டுள்ளது. இவ் உத்தரவை அடுத்து கடற்படைத் தலைமை நிலைமையை நேரில் அவதானித்ததோடு விசாரணையையும் முடுக்கி விட்டுள்ளது.

இதேவேளை, புலிகளால் கைப்பற்றிய படகிற்குப் பொறுப்பான பல கடற்படையினர் இராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்ணான்டோ நியமித்துள்ள விசாரணைக்குழு இவ்விசாரணையை மேற்கொள்ளவும் உள்ளது,

இச்சம்பவம் தொடர்பாக மேலே குறிப்பிட்ட விடயங்கள் யாவும் கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில், குறிப்பாக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளிலும் வெளிவந்தசெய்திகள் ஆகும். இந்த நிலையில், பிரதமர் டி பி விஜயதுங்கா படகு நங்கூரம் கழன்றதால் அடித்துச் செல்லப்பட்டது கடற்படையினர் படகைத் தேடுகின்றனர் எனக் கூறுவதெல்லாம், முன்னுக்குப் பின் முரணான ஏமாற்றுப் பேச்சுக்கள் ஆகும்.

ஆனால் பிரதமர் டி. பி. விஜயதுங்கா மட்டுமல்ல சிறிலங்கா அரசாங்கமும். இராணுவத் தரப்பும் இவ்வாறான பொய்களையும் உண்மைக்குப் புறம்பான தகவல்களையும் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு வருகின்றன. சில நேரத்தில் தகவல்களை முற்றாக மறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இறுதியில் தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டே வருகின்றது.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி இரு மாதங்களின் பின் கிழக்கு தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாக இராணுவம் அறிவித்தது. ஆனால் இன்று 27 மாதங்களின் பின்பும் கிழக்கில் புலிகளின் தாக்குதல் தொடர்கின்றது. எவ்வாறு புலிகளைக் கட்டுப்படுத்துவதெனத் தெரியாது இராணுவம் திணறுகின்றது. அத்தோடு தவிர்க்க முடியாது விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல் தொடர்பான செய்திகளையும், இழப்புக்களையும் இராணுவம் வெளியிட வேண்டிய நெருக்கடியிலும் உள்ளது.

இதேபோன்றே அண்மையில் விடுதலைப்புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 விமானம் தொடர்பாகவும், தீவுப்பகுதியில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஆறு சிரேஷ்ட அதிகாரிகளும் மேலும் மூவரும் கொல்லப்பட்டமை தொடர்பாகவும், மண்டைதீவில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட படகு தொடர்பாகவும் முன்னுக்குப் பின் முரணான செய்திகளை அரச தரப்பும், இராணுவத் தரப்பும் வெளியிட்டு வந்தன. ஆனால் உண்மையை மறைக்க முடியாது தகவல்களும், சம்பவங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதே சமயம் கடந்தகால சிறிலங்கா அரசாங்கத்தின் அறிவிப்புக்களைத் தெளிவாகக் கவனிப்பவர்கள் வேறு ஒருவரின் உதவியும் இன்றி நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்ளலாம். இதனை சாதாரண மக்களும் தற்பொழுது விளங்கிக் கொள்ளத்தொடங்கியுள்ளனர். இந்நிலையில் இனிமேல், அரசாங்கத் தரப்பில் பிரதமரோ அன்றி வேறுயாரோ மக்களை முட்டாள்கள் ஆக்கும் முயற்சியில் ஈடுபடுவது தம்மைத் தாமே முட்டாள்களாக்கும் முயற்சியாக அமையுமே ஒழிய ஒருபோதும் நன்மை அளிக்கப் போவதில்லை. இதை அரசாங்கம் புரிந்து கொள்வது நல்லது.

பானுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நிலவிவரும் சர்ச்சைக்கு தீர்வு காணப்படாமையே யெல்சின் தமது விஜயத்தை ரத்துச் செய்தமைக்கான காரணமாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

இதேவேளை தென் கொரியத் தலைநகர் சியோனுக்கு அடுத்தவாரம் மேற்கொள்ளத் திட்டமிட்ட விஜயத்தையும் ரத்துச் செய்துள்ள அதிபர் யெல்சின் இதுபற்றி தென் கொரிய அதிபருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மாறி முடியும் என்று ஜப்பான் கூறி வருகின்றமை தெரிந்ததே

ஆனால் உள்ளூரில் கன்சர்வேட்டிவ்களின் எதிர்ப்பை தனது தீவுகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை என்றும் கூறியுள்ளது.

## இளவரசிஆன் இந்தியா விஜயம்

(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசி ஆன் இந்தியாவிற்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். எலிசபெத் மகாராணியின் புதல்வியான இளவரசி ஆன் தனிப்பட்ட முறையிலான விஜயத்தை மேற்கொண்டு வியாழனன்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

## காஷ்மீரில் கடும் மழை 112பேர் உயிரிழப்பு

(டில்லி)

ஜம்முகாஷ்மீரில் பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை நூற்றிப்பன்னிரண்டாகஉயர்ந்துள்ளது செனாட் நதியிலும், ஷாவி நதியிலும் அபாய அளவுக்கு சமீபமாக வெள்ளம் பாய்கின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் மாநிலஅரசு ஈடுபட்டுள்ளது.

சிறீநகர் - ஜம்மு பகுதிகளில் சிறீநகர், ஹாட்கில், வதோட்டி நெடுஞ்சாலைகளில் மண்சரிவினால் பாதைப் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## சவுதிக்குஎப்.15 விமானங்கள் அமெரிக்கா விற்கும்

இஸ்ரேலின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சவுதி அரேபியாவுக்கு எழுபத்துஇரண்டு எப். 15 ரகப் போர் விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்க அதிபர் புஷ் ஒப்புதல் அளித்துள்ளார்.

எனினும் அதிபர் புஷ்ஷின் முடிவு காங்கிரஸின் அங்கீகாரம் பெற்றால் மட்டுமே செயற்படுத்தப்பட முடியும் என்றும் தெரிய வருகிறது.

அவர்கள் தமது குடும்பங்களை அழைத்துவர அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தகுதி பெற தனியார் நிறுவனங்களில் பணி குவைத் அரசு இன்னும் விளக்கம் தரவில்லை.

மற்ற வளைகுடா நாடுகளிலும் இதேபோன்ற சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

## ஊழல் விசாரணையில் ராவ் அமைச்சர்கள் தலையீடு

இந்தியாவின் 120 கோடி டாலர் வங்கி ஊழல் தொடர்பான பாராளுமன்றக் கமிட்டியின் விசாரணையில் செல்வாக்கை பிரயோகிக்க முயன்றதாக இரு அமைச்சர்கள் மீதான குற்றச் சாட்டு குறித்து பிரதமர் நரசிம்மராவ் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

தனது சிரேஷ்ட அமைச்சர்களுடனும், ஆளும் கட்சியில் உள்ள தனது சகாக்களுடனும் நரசிம்மராவ் இது குறித்து விவாதித்தார். ஆனால் எந்த முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என பிரதமரின் அதிகாரி தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களும் பதவி நீக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள்.

ஊழல் பற்றி விசாரித்து வரும் 30 அங்கத்தினர்கள் அடங்கிய கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டியானது, இரு உதவி நிதியமைச்சர்கள் கமிட்டியின் வேலைகளில் தங்கள் செல்வாக்கை பிரயோகிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டியுள்ளது

அணிசேரா மாநாட்டில் இருந்து திரும்பிய பிரதமர் நரசிம்மராவ் இக்குற்றச் சாட்டினால் சங்கடத்தை எதிர்நோக்கி வருகிறார்.

### இடம்பெயர்ந்த யாழ். ஆசிரியர்

## செப். 15 ஆம் திகதிக்குள் வருகையை அறிவிக்கவும்

(கொழும்பு)

''யாழ் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக இணைப்புப் பெற்று வேறு பாடசாலையில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களும் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரிடம் சென்று மீண்டும் அங்கு கடமையாற்றும் பொருட்டு தமது வருகையைத் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.''

இவ்வாறு தெரிவிக்கும் சுற்றுநிருபம் ஒன்று வட-கிழக்கு மாகாணம் தவிர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்விக் கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைச் சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களினதும் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன் அவர்களின் கையொப்பத்தினையும் பெற்றுக் கொண்டு இது தொடர்பாக அறிக்கையொன்றினையும் தமக்கு சமர்ப்பிக்குமாறும் அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வட - கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சின் செயலாளரால் கடந்த மாதம் 7 ஆம் திகதியிட்டு வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாகவே இந்தச் சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அச்சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 15 ஆம் திகதிக்கு முன் யாழ். கல்விப் பணிப்பாளர் முன் சமுகமளிக்கத் தவறும் ஆசிரியர்கள் அனைவரும் வேலை நீக்கம் செய்யப்படுவர் என மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த மேற்படி கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம் வட - கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களைக் குறிப்பாக வடபகுதி ஆசிரியர்களை அங்கு நிலைமை சீராகும் வரை திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன்அவசர கடிதம் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதிக்கு எழுதியுள்ளார்.

### சங்காபிஷேகம்

மந்துவில் கேலம் சிறி இராசராசேஸ்வரி அம்பாள ஆலயத்தின் சங்காபிஷேக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இவ் உற்சவத்தின் போது பிற்பகல் ஐந்து முப்பது மணிஅளவில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற இருக்கின்றார்.

### இருபத்திரண்டாம் ஆண்டு நிறைவு

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் அதன் 22வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய ஒவர்கேம் முறையிலானகரப்பந்தாட்டப்போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த வியாழனன்று இடம்பெற்றபொழுது தம்பகட்டிவிளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய வரணி விளையாட்டுககழக அணியைவென்றுசாம்பியன் ஆகியது

இப்போட்டியின் போது பிரதமவிருந்தினராக யாழ்கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் கப்டன் டீ ஏ.எம்.குணசிங்கம் அவர்களும், நவெராக எம். செபஸ்தியாம்பிள்ளையும் கடமையாற்றினர்.

## நன்றியும் பாராட்டும்

[யாழ்ப்பாணம்]

பாஷையூர் மகேந்திர புரத்தில் வாழ்கின்ற பொதுமக்களின் நலன் கருதி பாஷையூர் புனித அந்தோனியார் வீதியிலுள்ள சிறுவர் இல்லத்திலும், வசந்தபுரத்திலும் குழாய்க் கிணறுகள் அமைத்து மக்களின் இன்னலைத் தீர்த்தமைக்காக யாழ் மாநகர ஆணையாளருக்கும், தண்ணீர் பகுதி உத்தியோகத்தர்களுக்கும், பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலையம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது. இதேபோல் பாஷையூர்பங்குத் தந்தை, சிறுவர் இல்லப்பொறுப்பாளர் அருட்செல்வி ஆகியோருக்கும் நன்றியும்பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு சர்வோதய அமைப்பை அங்கவீனமாக்கிவிட்டது

(மாத்தறை)

– ஆரியரத்னா

இன்றைய அரசு சர்வோதயத்தை அங்கவீனர் நிலைக்கு கொண்டுவந்துள்ளது நாங்கள் எமது சக்திக்கு ஏற்றவிதத்தில் வறுமை ஒழிப்பிற்காக செயல்பட்டுவருகிறோம் என அம்மாந்தோட்டையில் நடைபெற்ற கருத்தரங்கில் சர்வோதய இயக்கத்தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தினா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் எமக்கு உதவி புரியும் வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு அந்த உதவியை அளிக்க வேண்டாம் என கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன அக்கடிதங்கள் இன்றும் என்கைவசமுள்ளன.

ஜனநாயக நாட்டில் சமூகத்தின் விமர்சனங்களுக்கு இடமளிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## அதிஷ்டம் கிடைத்தும் துரதிஷ்டம் விடவில்லை

[தலவாக்கொல்லை]

தலவாக்கொல்லை டெவன்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி டி.லெட்சுமி என்பவருக்கு 158 ஆவது லொட்டோ ஜாக்பொட் சீட்டுழுப்பில் சரியான இலக்கங்கள்மீதுவட்டமிட்டதன் மூலம் ஜாக்பொட் பரிசான 21 இலட்சம் ரூபா அதிஷ்டம் அடித்து அதைப் பெறமுடியாத துரதிஷ்ட நிலையிலுள்ளார்

158 லொட்டோ சீட்டிழுப்பிற்குரிய கூப்பனை (ஏ9613303) வாங்கி அவரது கணவன் ஆறு இலக்கங்களை வட்டமிட்டு ஏஜென்டிடம் ஏ.பி. கூப்பனை கையளித்து விட்டு சி கூப்பனை தம்முடன் வைத்திருந்தார்.

தொலைக்காட்சி சீட்டிழுப்பில் இவர்கள் வட்மிட்ட இலக்கங்கள் ஜாக்பொட்டாக விழுந்தபோது (21இலட்சம்) அதனைப் பெறுவதற்காக கொழும்பு சென்றனர். ஆனால் குறித்த அதிகாரிகள் முறைகேடாக பரிசினைக் கோரமுயன்றதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி தம்பதிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

# ஈழநாதம்

## தாய்வானுக்கு விமான விற்பனை அமெரிக்கா – சீனா முறுகல் நிலை

(வாஷிங்டன்)
தாய்வானுக்கு 150 எப் - 16 ரக ஜெட் போர் விமானங்களை விற்பதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இம்முடிவுக்கு எதிராக சீனா கடுமையாக செயற்படுமானால்அதன் விளைவுகள் பாரதூரமாக அமையும் என வாஷிங்டன் எச்சரித்துள்ளது.

மேற்படி எச்சரிக்கையை தற்காலிக வெளிநாட்டுஅமைச்சர் லாரன்ஸ் ஈகிள் பேர்ஜர் ராய்ட்டர், அஸோஸியேட்டட் பிரஸ் ஆகியவற்றுக்கு அளித்த பேட்டியிலேயே விடுத்துள்ளார்.

ஜனாதிபதி புஷ் தாய்வானுக்கு 150 எப் - 16 ரக ஜெட் விமானங்களை ஏன் விற்பனை செய்ய முடிவு செய்தார் என்பதை கோபமுற்றிருக்கும் சீனத் தலைவர்களுக்கு விளக்கும் பொருட்டே அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சர் கிளார்க் பீகிங் சென்றிருந்தார்.

கிளார்க்கின் விளக்கத்தை கேட்ட பின்பும் புஷ்ஷின் முடிவினை சீனா கண்டித்ததுடன் அவரினது விளக்கத்தையும் நியாயமற்றது எனக் கூறி நிராகரித்து விட்டது.

இது விடயம் தொடர்பாக ஆத்திரமடைந்துள்ள சீனா ஐ. நாவிலும் ஆயுத விற்பனை ஏவாயுதப் பரவல், தடை ஆகியவை சம்பந்தமான பேச்சுக்களிலும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என பகிரங்கமாக அச்சுறுத்தி வருகிறது.

வர்த்தக தடை சம்பந்தமாக இரு நாடுகளுமே பயமுறுத்தல்களில் இறங்கி உள்ளதால் சீன அமெரிக்க உறவில் மேலும் விரிசல்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

கிளார்கின் சீன விஜயத்தை அடுத்து அமெரிக்காவின் உத்தியோக பூர்வ கருத்தை ஈகிள் பேர்ஜர் வெளியிட்டபோது சீனா எதிர்நோக்கும் எதிர் விளைவுகள் குறித்த எச்சரிக்கையை தெளிவாக்கவில்லை.

## ஏழு பொறியியல் மாணவர் கடலில் மூழ்கி மரணம்

(சென்னை)
கோவளர் கடற்கரையை அடுத்துள்ள சுற்றுப்பயண மையம் ஒன்றில் கடலில் மூழ்கியதால் தமிழ்நாடுபொறியியல்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏழுபேர்நேறறு முன்தினம் மரணமடைந்தனர். இவர்களில் மூவர் பெண்கள் கோவா மாநிலத்தின் தென்பகுதியில் இருக்கும் கோவளர் கடற்கரையில் நீச்சலுக்காக இம் மாணவர்கள் சென்ற போது வேகமான நீரோட்டத்தினால் அடித்துச் செல்லப்பட்டார்கள் இவ்வாறு நீந்தச் சென்ற பத்து மாணவர்களில் மூவர் மட்டுமே உள்ளூர் மக்களால் காப்பாற்றப் பட்டனர். இவர்களில் ஆறு பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர். ஒருவர் கண்டுபிடிக்கப் படவில்லை என்று கூறப்படுகிறது.

## சீனக் கம்யூனிஸ்ட்களுடன் தொடர்பை வலுப்படுத்த காங்கிரஸ் கட்சி ஆர்வம்

(டில்லி)
அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் தமக்கிடையேயான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ள இருக்கின்றன. இந்தியா வந்துள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் நிலைக் குழுவுடன் இது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளது. சீனக்குழுவுக்கு வூ - பஃோர் தலைமை வகிக்க இந்திய காங்கிரஸ் கட்சியின் தூதுக் குழுவுக்கு வீ என். சாட்கில் தலைமை தாங்கினார்.

புதிய பொருளாதார மற்றும் சர்வதேச அரசியல் நிலைமையை ஏற்படுத்துவதில், இந்தியாவும் சீனாவும் குறிப்பிடத்தக்க பங்காற்ற முடியும் என்று இரு தூதுக்குழுக்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

## சர்வாதிகாரமாக நடக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா

– மூப்பனார் குற்றச்சாட்டு

(சென்னை)
தமிழக முதலமைச்சர் ... எல். ஏக்கனவே அதிருப்தி அடைந்துள்ளார்கள் ...

### தொலைக்கல்விக்கு விண்ணப்பிக்குக

1993ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகவிருக்கும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியில் இணைய விரும்பும் பயிற்றப்படாத ஆசிரியர்கள் எதிர்வரும் அக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றது.

பணிப்பாளர், தொலைக்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### போசாக்கின்மை

பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் கிடைக்கும் உணவில் போசாக்கின்மை ஆகியவை மேற்படி மரணங்களுக்கு காரணங்களாக அமைகின்றன.

அத்துடன் தேவையான மருத்துவ சுகாதார வசதிகள், மற்றும சுகாதார பாதுகாப்பு வசதிக் குறைபாடுகளும் மேற்படி மரணங்களுக்கு காரணமாகும். சிசுக்களின் எடை குறைவானதாலேயே அவை பிறக்க முன்னரோ அல்லது ...

## சிறில. தடுப்பு முகாம்களில் 7356 பேர் தடுத்துவைப்பு

(கொழும்பு)
சிறிலங்காவின்தடுப்பு முகாம்களில் மொத்தம் 7356 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 5623 பேர் ஜே.வி.பி. சந்தேக நபர்கள் எனவும் இவர்களில் பலர் 3வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் மனித உரிமை மீறல் விசாரணைக்குழு தனது அறிக்கையில் தெரிவிததுள்ளது தடுத்துவைக்கப்பட்டிருந்தபலரை காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

ஜே வி.பி யினரை ஒடுக்கும் நடவடிக்கையினால் 10 000 தொடக்கம் 60 000 பேர்வரை தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்து பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் இவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்கப்படவில்லை எனவும் இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது

ஜே. வி பி. யினர் மீண்டும் தலைதூக்கும் நிலைமைதோன்றியுள்ளது எனவும் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காதவிடத்து ஜே.வி பி க்கு ஆதரவு பெருக சநதர்ப்பம் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் ஜே.வி.பி. செயற்பட தொடங்கினால் அது முன்னரவிட கடுமையான விளைவை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)
யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இலக்கிய விழாக்களில் ஒன்றாகிய பாரதிவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11. 30 மணியளவில் நடைபெற உள்ளது.

இவ் விழாவில் கவியரங்கம் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

திரு. க. குணராஜா சிறப்புரை நிகழ்த்த உள்ளார். இக் கல்லூரியின் தமிழ் மன்றம் இவ் விழாவை ஒழுங்கு செய்துள்ளது.


### வீரச்சாவு



லெப். பூபால்

10- 09- 1992 அன்று ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி லெப்டினன்ட் பூபால் (வேலாயுதம் கிருஸ்ணகுமார், அல்வாய் வடக்கு, பருத்தித்துறை) வீரச்சாவுஅடைந்தார்.






## பாகிஸ்தானில் பெருவெள்ளம் ஒரு லட்சம் பேரை காணவில்லை

(இஸ்லாமாபாத்)
கடந்த வாரம் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாகிஸ்தானின் வட பகுதியில் ஓர் இலட்சத்துக்கு அதிகமான மக்கள் காணாமல் போயிருக்கக்கூடும் அல்லது உயிரிழந்திருக்கலாம் என்று பிரதமர் அப்துல் கயாம் கூறியுள்ளார்.

1927ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்துக்குப் பிறகு பெரும் பாதிப்பு இப் பகுதியில் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மீட்ப்புப் பணியில் இதுவரை 250 சடலங்கள் எடுககப்பட்டுள்ளன. பல பகுதிகளுடன் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன அரசாங்கம் மழை நிவாரண நிதிக்கு உதவும்படி பொது மக்களைக் கோரியுள்ளது. இங்கிலாந்து 2000 மில்லியன் டாலர் கொடுதது உதவியுள்ளது.

பாகிஸ்தானின் வட பகுதிகள் பலவும், மலைப்பகுதிகள், பஞ்சாப் பிரதேசத்திலும் மழையின் பாதிப்பினால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பஞ்சாப் மாநிலத்தில் தாழ் நிலப் பிரதேசங்களில் இருபது மாவட்டங்கள் தண்ணீரில் அமுங்கியுள்ளதாக அஞ்சப்படுகிறது.

தற்சமயம் தென் பஞ்சாப்பில் கங்கை ஆற்றுப் படுகைகளில் வாழும் மககளைப்பாதுகாப்பான இடத்துக்கு மாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன இப்பகுதியிலுள்ள ஜெகாள் என்ற மாவட்டம் உள்ளூர் வர்த்தகப் பிராந்தியமாதலால் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படாது இருக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### வட–கிழக்கில்

தார். வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை இராணுவததினர் தொடர்கிறார்கள் எனினும் இதன் விபரங்களை பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் வெளியிட முடியாதுள்ளதுஎன்றும் அவர் தெரிவித்தார்.

### வடக்கில்

இதேவேளை ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி விசைப் படகை விடுதலைப்புலிகளிடம் பறிகொடுத்தமை தொடர்பாக கடற்படையைச்சேர்ந்த பலர் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை மேற்

### கிழக்கில்

டத்தில் பொதுமக்களின் 31 வீடுகள் எரிக்கப்பட்டதற்கும் காரணமான 13 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். இச்சம்பவத்திற்கும் இராணுவத்தினரே காரணம் என இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்த ஆணைக்குழு தனது அறிககையில் தெரிவித்துள்ளது.

மேலும் பல மனித உரிமை ...

### நிவாரண

அரசின் நிவாரண வெட்டு நடவடிக்கையால் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசின் இவ்வாறான நடவடிக்கை அகதிகளாகிய மக்களைப் பட்டினிச் சாவிற்குத் தள்ளும் மனிதாபிமானமற்ற நடவடிக்கையாகும் என்று வெகுஜன அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாளை காலை 8.00 மணி முதல் கிளிநொச்சி அரசசெயலக முன்னால் இம் மறியல் போராட்டம் நடைபெறும். இம் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனைவரையும் அணிதிரண்டு வருமாறு கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### இராணுவ

சீனக் கம்யூனிஸ்ட்களுடன்

# தொடர்பை வலுப்படுத்த காங்கிரஸ் கட்சி ஆர்வம்

(டில்லி)

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் தமக்கிடையேயான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ள இருக்கின்றன. இந்தியா வந்துள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்நிலைக் குழுவுடன் இது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளது. சீனக்குழுவுக்கு வூ - பேோர் தலைமை வகிக்க இந்திய காங்கிரஸ் கட்சியின் தூதுக் குழுவுக்கு வீ என். சாட்கில் தலைமை தாங்கினார்.

புதிய பொருளாதார மற்றும் சர்வதேச அரசியல் நிலைமையை ஏற்படுத்துவதில், இந்தியாவும் சீனாவும் குறிப்பிடத்தக்க பங்காற்ற முடியும் என்று இரு தூதுக்குழுக்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

# சர்வாதிகாரமாக நடக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா

## – மூப்பனார் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சர்வாதிகாரமாக நடக்கிறார் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கறுப்பையா மூப்பனார் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெயலலிதா அரசைக் கவிழ்க்கும் எண்ணம் எனக்கு இல்லை. அவர் கட்சியில், அவர் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏக்களே அதிருப்தி அடைந்துள்ளார்கள். முதலமைச்சரும், அ இ அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சியின் தலைவருமான செல்வி ஜெயலலிதா சர்வாதிகாரமாக நடந்து கொள்கின்றார் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்றும் மூப்பனார் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

# சாதகமான பதில் இன்றேல் பொது வேலை நிறுத்தம்

## -வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு இப்மாதம் 15-ம் திகதிக்கு முனனர் அரசாங்கம் சாதகமான பதில்

தரமறுத்தால் பொது வேலை நிறுத்தம் ஒன்றில் குதிக்கப் போவதாக மேற்படி சங்கத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பள உயர்வு, இடைக்கால அலவன்ஸ் தொடர்பாக மேற்படி சங்கம் பல கோரிக்கைகளை அரசிடம் சமர்ப்பித்திருந்தது அத்துடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அவசரத தேவைகளின் போது அழைக்கப்பட்டால்அதற்குரிய விசேட அலவன்ஸ் வழங்கப்படவேண்டும் எனவும்வதிவிட டாக்டர்களுக்கு 1500ரூபாவும் ஏனைய டாக்டர்களுக்கு 2000 ரூபாவும் வழங்கப்படவேண்டுமெனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## தரையில்

தனியார் கட்டடத்தில் காலை நேர பாடசாலையாக இயங்கி வருகிறது. இங்கு கல்விபயிலும் மாணவர்களுக்கோ ஆசிரியர்களுககோ தளபாட வசதி எதுவும் இல்லாமையால் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே இப்பாடசாலை இயங்கிவருகிறது.

சபந்தப்பட்டவர்கள் இவ்விடயததில் அக்கறை காட்டுவார்கள் என பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

## அம்பிலாந்துறையில்

தான்பிள்ளை - சற்குணசிங்கம் அம்பிலாந்துறை) ஆகியோர் வீரச்சாவடைந்தனர் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

## பழுதடைந்த

'குமண' என்ற கப்பலில் அதிகளவு உளுத்துப்போன தானியங்கள் எடுத்துவரப்பட்டதாக தெரிய வந்ததை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது இவ்வாறான தானிய வகைகள் அனுப்பி வைக்கப்படுவதை தடுக்கும்படி கோரும் அவசர செய்தி ஒன்று கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபருக்கு நேற்று மாலை அனுப்பிவைக்கப்பட்டது. (க)

டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றது

பணிப்பாளர், தொலைக்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## போசாக்கின்மை

பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் கிடைக்கும் உணவில் போசாக்கின்மை ஆகியவை மேற்படி மரணங்களுக்கு காரணங்களாக அமைகின்றன.

அத்துடன் தேவையான மருத்துவ சுகாதார வசதிகள், மற்றும சுகாதார பாதுகாப்பு வசதிக் குறைபாடுகளும் மேற்படி மரணங்களுக்கு காரணமாகும். சிசுக்களின் எடை குறைவானதாலேயே அவை பிறக்க முன்னரோ அல்லது பிறந்த பின்னரோ மரணமடைகின்றன. யுத்தகால சூழ்நிலை காரணமாக கர்ப்பிணித் தாய்மாருக்குத் தேவையான போசாக்குள்ள உணவு கிடைக்காமை, வைத்தியவசதி இல்லாமை காரணமாக குழந்தைகள் நிறை குறைவாக பிறக்கின்றன. குழந்தைப்பேறு காலம் வரை தாய்மாரின் உடல்நிலை மிக நல்ல நிலையில் இருக்கவேண்டும். கருவுற்ற காலத்தில் மாதம் தோறும் மருத்துவ சோதனை செய்து கொள்ள வேண்டும்.

தற்போது பிறக்கும் குழந்தைகள் சில காலம் முந்தியும் பிறக்கின்றன யுத்த கால அதிர்ச்சி சம்பவங்கள் இதற்கு காரணமாக அமையலாம். காலம் முந்திப்பிறக்கும் குழந்தைகள் முழுமையானவளர்ச்சி ஏற்படாத காரணத்தால் இறக்கின்றன என்றும் பேராசிரியர் சிவசூரியர் தெரிவித்தார்



## லெப். பூபால்

10-09-1992 அன்று ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி லெப்டினன்ட் பூபால் (வேலாயுதம் கிருஸ்ணகுமார், அல்வாய் வடக்கு, பருத்தித் துறை) வீரச்சாவுஅடைந்தார்.



## வீரவேங்கை சிலம்பரசன்

11-09-1992 அன்று அளவெட்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள்போராளி வீரவேங்கை சிலம்பரசன் (லோலோ- சின்னையா தயாபரன் கோப்பாய் தெற்கு, இருபாலை) வீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மீட்ப்புப் பணியில் இதுவரை 250 சடலங்கள் எடுககப்பட்டுள்ளன. பல பகுதிகளுடன்

## வட-கிழக்கில்

தார். வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை இராணுவததினர் தொடர்கிறார்கள் எனினும் இதன் விபரங்களை பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் வெளியிட முடியாதுள்ளதுஎன்றும் அவர் தெரிவித்தார்.

## வடக்கில்

இதேவேளை ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி விசைப் படகை விடுதலைப்புலிகளிடம் பறிகொடுத்தமை தொடர்பாக கடற்படையைச்சேர்ந்த பலர் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பதிவு

றில் ஈடுபட்டுள்ளோரையும் உள்ளடக்கும்

வாணிபம்/தொழில் முயற்சியின் வரவு செலவுகள் தொடர்பாக முறையான ஆவணங்களும் கணக்குப் பதிவேடுகளும் பேணப்படவேண்டும்

நகை வாணிபர்கள் தமது கொள்வனவு தொடர்பாக பொருளை விற்றவரின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் கொள்வனவு ஆவணங்களில் குறிப்பிடவேண்டும்

நகை விற்பனை தொடர்பாக நகையின் நிறை, சேதாரம் கூலி ஆகியவற்றை தனித்தனியே குறிப்பிடுவதுடன் நகையின் மாற்றையும் தெளிவாக விற்பனை ஆவணத்தில் குறிப்பிட வேண்டும்.

இருபது மாவட்டங்கள் தண்ணீரில் அமுங்கியுள்ளதாக அஞ்சப்படுகிறது.

தற்சமயம் தென் பஞ்சாப்பில் கங்கை ஆற்றுப் படுகைகளில் வாழும் மககளைப்பாது

## கிழக்கில்

டத்தில் பொதுமக்களின் 31 வீடுகள் எரிக்கப்பட்டதற்கும் காரணமான 13 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். இச்சம்பவத்திற்கும் இராணுவத்தினரே காரணம் என இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்த ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் பல மனித உரிமை மீறல் சம்பவங்களில் படையினர் ஈடுபட்டுள்ளதாக இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அரசு திட்டமிட்டு வரும் இவ்வேளையில் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை படையினர் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்

ஆயுத படையினர் மீது இவ்வாறான குற்றச்சாட்டுககள் சுமத்தப்பட்டுள்ளமை சிறிலங்கா அரசிற்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் எதிர்கால இராணுவ நடவடிக்கையில் இது இடையூறை ஏற்படுத்தலாம் என அரசு அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் வற்புறுத்தலினாலேயே இவ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

அரசின் நிவாரண வெட்டு நடவடிக்கையால் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசின் இவ்வாறான நடவடிக்கை அகதிகளாகிய மக்களைப் பட்டினிச் சாவிற்குத் தள்ளும் மனிதாபிமானமற்ற நடவடிக்கையாகும் என்று வெகுஜன அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படிருக்கிறது.

நாளை காலை 8.00 மணி முதல் கிளிநொச்சி அரச செயலக முன்னால் இம் மறியல் போராட்டம் நடைபெறும். இம் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனைவரையும் அணிதிரண்டு வருமாறு கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இராணுவ

புதிய நியமனம் வழங்கப்பட்ட பின்பும் வடக்கில் தொடர்ந்து தங்கியிருப்பாரா என்பதும் கேள்விக்குரியதே என்றும் தெரியவருகிறது.

அடுத்து இரு வாரங்களுக்கு இடையில் மூவர் பிரிகேடியர்களாகவும், நால்வர் கேணல்களாகவும், ஏழு அல்லது எட்டுப்பேர் லெப் கேணல் தரத்திற்கும் பதவி உயர்த்தப்படலாம்என்றும் தெரியவருகிறது. ஓய்வுபெற்றுச் செல்லும் நபர்களின் இடங்களை நிரப்புவதற்காகவே இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படுவதற்கு முன்பாக இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படலாம் எனவும், மேஜர் ஜெனரல் சி. ஜே அபயரட்ண, 33,000 பேரைக் கொண்ட இராணுவத்தொண்டர் படையின் தளபதியாக இம்மாத ஆரம்பத்தில் நியமிக்கப்படுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


கணபதி துணை

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் ஆவணித் திங்கள் 29-ம் நாள் (14-09-92) திங்கள் பி. ப. 12.00 மணிமுதல் 2.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **பரமநாதன்** | **அரியசோதி** |
| அவர்கள் | அவர்கள் |

ஆகிய இருவர் கரங்களும் சுற்றத்தார் வாழ்த்திட உயர்ந்தோர் ஏத்திட மணமகள் இல்லத்தில் இறைவன் அருளால் இனிதே இணைய இருப்பதால் உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[இருவீட்டார் அழைப்பு]

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் குடும்பத்தினர் நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

திரு. திருமதி அப்பாப்பிள்ளை சுப்பிரமணியம் குடும்பத்தினர் கைதடி தெற்கு, கைதடி

[சி-3169]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 12-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5605

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

40-2249, 42-488 24 5496, 26 6568, 26-1658, 27-9105, 26-2764, 26-5202, 22-8855, 24-5137, 27-6579, 24-6480, 40-7299, 41-1462, 42-9112, 28-2342, 42-9625, 24-3063, 27-2084, 42-2397, 26-3130, 41-1227, 24-4207, 28-1799, 26-9992, 24-1685, 41-5178, 41-5417, 24-5958.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

24-1040, 24-9938 26-5505, 41-6893, 27-5045, 28 2511, 26-2414, 27-5417, 26-2299, 28-4672, 26-3632, 24-5258, 28-1085.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.